DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 72/2026
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சத்தியசீலன் |
| Father / Husband Name | கிருஷ்ணமூர்த்தி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.**05.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுராந்தகத்தில் வசித்து பாலிடப் டியூப்ஸ் என்ற தனியார் நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.09.2025 ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் எங்கள் நிறுவனத்தில் பணி புரியும் பீகார் மாநிலத்தை சேர்ந்த அவதேஷ்பிரசாத், ரூதல்மேத்தோ மற்றும் ரவீந்திரகுமார் ஆகியோர் காய்கறி வாங்குவதற்காக படாளம் சென்று நிறுவனத்திற்கு நடந்து வந்துகொண்டிருந்தபோது கற்பகவிநாயகா மருத்துவ கல்லூரிக்கு எதிரே சாலையை கடக்கும் போது அவதேஷ்பிரசாத் என்பவர் மீது திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** புகாரை நான் எப்பொழுது கொடுத்தேன் என்றால் 17.09.2025 ம் தேதி புகார் கொடுத்தேன். சம்பவம் குறித்து யார் எப்பொழுது தகவல் சொன்னார்கள் என்றால் எங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்த மூர்சிங் என்பவர் 15.09.2025 ம் தேதி தகவல் சொன்னார். சம்பவம் குறித்து தகவல் தெரிந்த உடனே நான் ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் மருத்துவமனையில் சிகிச்சையில் நன்றாக உள்ளதாக தெரிந்ததால் உடனே புகார் கொடுக்கவில்லை. புகாரில் மூர்சிங் சொல்லி தான் தகவல் தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. புகாரில் கார் மோதி தான் விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. இறந்தவர் உடன் சென்ற நபர்களை பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் இல்லை. மேற்படி மூன்று நபர்கள் தான் ஒன்றாக சென்றார்கள் என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மூர்சிங் என்பவர் தகவல் சொன்னார். போலிசார் விசாரிக்கும் போது மேற்படி விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன்.

3. விபத்து நடந்த இடத்தை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். கற்பகவிநாயகா மருத்துவ கல்லூரிக்கு எதிரே சாலையை கடப்பதற்கான வழி இல்லை என்றால் சரிதான். அவதேஷ்பிரசாத் என்பவர் இரவு நேரத்தில் மேற்படி இடத்தில் சாலையை கடக்காமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். இறந்தவரின் கவனக்குறைவினால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து முழுமையாக தெரியாமல் எங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்தவருக்கு ஆதராவாக பொய்யான புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்று காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். பின்னர் போலிசார் வேறு எங்கும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் விவரங்கள் தெரிந்திருந்தால் உடனே புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் எனது சாட்சியம் நம்பத்தகுந்தது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**